(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 3(2).]

# பாராளுமன்றத்தின்
# 3 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

2025 டிசம்பர் 19, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2026 சனவரி 06, செவ்வாய்க்கிழமை
## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

நீதித்துறை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டங்களின் மூலம் திருத்தி அமைக்கப்பட்ட, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2025 திசெம்பர் 01 ஆம் திகதிய 2465/07 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.12.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 151 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 237 ஆம் பிரிவின் கீழ் அப்போதைய போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2025 செத்தெம்பர் 04 ஆம் திகதிய 2452/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.12.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2),— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 237 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 141, 143, 144, 157அ, 168 மற்றும் 190 ஆம் பிரிவுகளின் கீழ் அப்போதைய போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2025 செத்தெம்பர் 25 ஆம் திகதிய 2455/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.12.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர்,— கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ், அப்போதைய கடற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2024 பெப்புருவரி 15 ஆம் திகதிய 2371/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.12.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர்,— கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1990 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டச் சட்டத்தின் 29 ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2025 மாச்சு 19 ஆம் திகதிய 2428/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.12.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

தொழில் அமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர்,— கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— (129 ஆம் அத்தியாயமான) கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் 66 ஆம் பிரிவின் கீழ் தொழில் அமைச்சரினால் 2025 டிசெம்பர் 12 ஆம் திகதி ஆக்கப்பட்டதும் 2025.12.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

## (2026, சனவரி 06, செவ்வாய்க்கிழமை)

1582/2025

கௌரவ சுஜீவ திசாநாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) எட்டாவது பாராளுமன்றத்தில் 2015 செப்டெம்பர் மாதத்திலிருந்து நியமிக்கப்பட்ட பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சருக்கு, அப்போதைய அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அந்த உத்தியோகபூர்வ வாகனங்களின் பதிவு இலக்கம், வகை மற்றும் மாதிரி வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) குறித்த உத்தியோகபூர்வ வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்த காலப்பகுதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ வாகனம் ஒவ்வொன்றுக்கும் வழங்கப்பட்டிருந்த மாதாந்த எரிபொருளின் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) சம்பந்தப்பட்ட அமைச்சர் பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பதவியை வகித்த காலப்பகுதியில், அத்தகைய உத்தியோகபூர்வ வாகனங்களுக்காக மாதாந்தம் பயன்படுத்திய எரிபொருள் லீட்டர் அளவு மற்றும் செலவு, உத்தியோகபூர்வ வாகனம் ஒவ்வொன்றின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1588/2025

கௌரவ சுஜீவ திசாநாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) எட்டாவது பாராளுமன்றத்தில் 2015 செப்டெம்பர் மாதத்திலிருந்து நியமிக்கப்பட்ட நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சருக்கு, அப்போதைய அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அந்த உத்தியோகபூர்வ வாகனங்களின் பதிவு இலக்கம், வகை மற்றும் மாதிரி வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) குறித்த உத்தியோகபூர்வ வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்த காலப்பகுதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ வாகனம் ஒவ்வொன்றுக்கும் வழங்கப்பட்டிருந்த மாதாந்த எரிபொருளின் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) சம்பந்தப்பட்ட அமைச்சர், நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் பதவியை வகித்த காலப்பகுதியில், அத்தகைய உத்தியோகபூர்வ வாகனங்களுக்காக மாதாந்தம் பயன்படுத்திய எரிபொருள் லீட்டர் அளவு மற்றும் செலவு, உத்தியோகபூர்வ வாகனம் ஒவ்வொன்றின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1594/2025

கௌரவ சுஜீவ திசாநாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) எட்டாவது பாராளுமன்றத்தில் 2015 செப்டெம்பர் மாதத்திலிருந்து நியமிக்கப்பட்ட கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சருக்கு, அப்போதைய அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அந்த உத்தியோகபூர்வ வாகனங்களின் பதிவு இலக்கம், வகை மற்றும் மாதிரி வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) குறித்த உத்தியோகபூர்வ வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்த காலப்பகுதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ வாகனம் ஒவ்வொன்றுக்கும் வழங்கப்பட்டிருந்த மாதாந்த எரிபொருளின் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) சம்பந்தப்பட்ட அமைச்சர், கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சர் பதவியை வகித்த காலப்பகுதியில், அத்தகைய உத்தியோகபூர்வ வாகனங்களுக்காக மாதாந்தம் பயன்படுத்திய எரிபொருள் லீட்டர் அளவு மற்றும் செலவு, உத்தியோகபூர்வ வாகனம் ஒவ்வொன்றின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1599/2025

கௌரவ சுஜீவ திசாநாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) எட்டாவது பாராளுமன்றத்தில் 2018 நவம்பர் 09 ஆம் திகதியிலிருந்து நியமிக்கப்பட்ட வீடமைப்பு மற்றும் சமூக நலன்புரி அமைச்சருக்கு, அப்போதைய அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அந்த உத்தியோகபூர்வ வாகனங்களின் பதிவு இலக்கம், வகை மற்றும் மாதிரி வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) குறித்த உத்தியோகபூர்வ வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்த காலப்பகுதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ வாகனம் ஒவ்வொன்றுக்கும் வழங்கப்பட்டிருந்த மாதாந்த எரிபொருளின் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) சம்பந்தப்பட்ட அமைச்சர், வீடமைப்பு மற்றும் சமூக நலன்புரி அமைச்சர் பதவியை வகித்த காலப்பகுதியில், அத்தகைய உத்தியோகபூர்வ வாகனங்களுக்காக மாதாந்தம் பயன்படுத்திய எரிபொருள் லீட்டர் அளவு மற்றும் செலவு, உத்தியோகபூர்வ வாகனம் ஒவ்வொன்றின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1601/2025

கௌரவ சுஜீவ திசாநாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) எட்டாவது பாராளுமன்றத்தில் 2018 நவம்பர் 09 ஆம் திகதியிலிருந்து நியமிக்கப்பட்ட நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சருக்கு, அப்போதைய அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அந்த உத்தியோகபூர்வ வாகனங்களின் பதிவு இலக்கம், வகை மற்றும் மாதிரி வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) குறித்த உத்தியோகபூர்வ வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்த காலப்பகுதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ வாகனம் ஒவ்வொன்றுக்கும் வழங்கப்பட்டிருந்த மாதாந்த எரிபொருளின் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) சம்பந்தப்பட்ட அமைச்சர், நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர் பதவியை வகித்த காலப்பகுதியில், அத்தகைய உத்தியோகபூர்வ வாகனங்களுக்காக மாதாந்தம் பயன்படுத்திய எரிபொருள் லீட்டர் அளவு மற்றும் செலவு, உத்தியோகபூர்வ வாகனம் ஒவ்வொன்றின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1606/2025

கௌரவ சுஜீவ திசாநாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) எட்டாவது பாராளுமன்றத்தில் 2018 நவம்பர் 09 ஆம் திகதியிலிருந்து நியமிக்கப்பட்ட கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சருக்கு, அப்போதைய அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அந்த உத்தியோகபூர்வ வாகனங்களின் பதிவு இலக்கம், வகை மற்றும் மாதிரி வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) குறித்த உத்தியோகபூர்வ வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்த காலப்பகுதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ வாகனம் ஒவ்வொன்றுக்கும் வழங்கப்பட்டிருந்த மாதாந்த எரிபொருளின் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) சம்பந்தப்பட்ட அமைச்சர், கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சர் பதவியை வகித்த காலப்பகுதியில், அத்தகைய உத்தியோகபூர்வ வாகனங்களுக்காக மாதாந்தம் பயன்படுத்திய எரிபொருள் லீட்டர் அளவு மற்றும் செலவு, உத்தியோகபூர்வ வாகனம் ஒவ்வொன்றின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1609/2025

கௌரவ சுஜீவ திசாநாயக்க,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) எட்டாவது பாராளுமன்றத்தில் 2018 நவம்பர் 09 ஆம் திகதியிலிருந்து நியமிக்கப்பட்ட வர்த்தக, நுகர்வோர், கூட்டுறவுத்துறை அலுவல்கள் மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சருக்கு, அப்போதைய அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அந்த உத்தியோகபூர்வ வாகனங்களின் பதிவு இலக்கம், வகை மற்றும் மாதிரி வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) குறித்த உத்தியோகபூர்வ வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்த காலப்பகுதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ வாகனம் ஒவ்வொன்றுக்கும் வழங்கப்பட்டிருந்த மாதாந்த எரிபொருளின் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) சம்பந்தப்பட்ட அமைச்சர், வர்த்தக, நுகர்வோர், கூட்டுறவுத்துறை அலுவல்கள் மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சர் பதவியை வகித்த காலப் பகுதியில், அத்தகைய உத்தியோகபூர்வ வாகனங்களுக்காக மாதாந்தம் பயன்படுத்திய எரிபொருள் லீட்டர் அளவு மற்றும் செலவு, உத்தியோகபூர்வ வாகனம் ஒவ்வொன்றின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1614/2025

கௌரவ சுஜீவ திசாநாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) எட்டாவது பாராளுமன்றத்தில் 2015 செப்டெம்பர் மாதத்திலிருந்து நியமிக்கப்பட்ட தேசிய கலந்துரையாடல்கள் பற்றிய அமைச்சருக்கு, அப்போதைய அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அந்த உத்தியோகபூர்வ வாகனங்களின் பதிவு இலக்கம், வகை மற்றும் மாதிரி வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) குறித்த உத்தியோகபூர்வ வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்த காலப்பகுதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ வாகனம் ஒவ்வொன்றுக்கும் வழங்கப்பட்டிருந்த மாதாந்த எரிபொருளின் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) சம்பந்தப்பட்ட அமைச்சர், தேசிய கலந்துரையாடல்கள் பற்றிய அமைச்சர் பதவியை வகித்த காலப்பகுதியில், அத்தகைய உத்தியோகபூர்வ வாகனங்களுக்காக மாதாந்தம் பயன்படுத்திய எரிபொருள் லீட்டர் அளவு மற்றும் செலவு, உத்தியோகபூர்வ வாகனம் ஒவ்வொன்றின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1624/2025

கௌரவ சுஜீவ திசாநாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) எட்டாவது பாராளுமன்றத்தில் 2018 நவம்பர் 01 ஆம் திகதியிலிருந்து நியமிக்கப்பட்ட திறன்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழிற்பயிற்சி அமைச்சருக்கு, அப்போதைய அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அந்த உத்தியோகபூர்வ வாகனங்களின் பதிவு இலக்கம், வகை மற்றும் மாதிரி வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) குறித்த உத்தியோகபூர்வ வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்த காலப்பகுதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ வாகனம் ஒவ்வொன்றுக்கும் வழங்கப்பட்டிருந்த மாதாந்த எரிபொருளின் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) சம்பந்தப்பட்ட அமைச்சர், திறன்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழிற்பயிற்சி அமைச்சர் பதவியை வகித்த காலப்பகுதியில், அத்தகைய உத்தியோகபூர்வ வாகனங்களுக்காக மாதாந்தம் பயன்படுத்திய எரிபொருள் லீட்டர் அளவு மற்றும் செலவு, உத்தியோகபூர்வ வாகனம் ஒவ்வொன்றின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2026 சனவரி 20, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

680/2025

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நுரைச்சோலை அனல் மின் நிலையத்தில், நிலக்கரி எரியூட்டப்படுவதால் சுற்றயல் கிராமங்களில் வசிக்கும் மக்கள் பல்வேறு சூழல் சார்ந்த பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளதை அறிவாரா;

(ii) அச்சூழல் சார்ந்த பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

818/2025

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை கல்வி நிர்வாக சேவை மற்றும் இலங்கை அதிபர் சேவையில் உள்ள அதிகாரிகளுள் தற்போது சம்பள ஏற்றம் இடைநிறுத்தப்பட்டுள்ள அதிகாரிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு சேவையின் அடிப்படையில் வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு அதிகாரியினதும் பெயர், சம்பள ஏற்றம் இடைநிறுத்தப்பட்டுள்ள திகதி மற்றும் அதற்கான காரணங்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்படி அதிகாரிகளின் சம்பள ஏற்றங்களை மீள வழங்குதல் மிகவும் மந்தகதியில் இடம்பெற்றுவருவதை அறிவாரா என்பதையும்;

(iv) மேற்படி அதிகாரிகள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் விசாரணைகளை விரைவுபடுத்தி, சம்பள ஏற்றங்களை வழங்கி, அவர்களுக்கு நீதியை நிலைநாட்டுவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

851/2025

கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பல்லேகலே, தும்பர சிறைச்சாலையில் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைக்கைதிகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி சிறைச்சாலையில் தடுத்து வைக்கக்கூடிய சிறைக்கைதிகளின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி சிறைச்சாலையின் புதிய நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்துவதன் மூலம் தற்போது சிறைச்சாலைகளில் காணப்படும் நெருக்கடியைக் குறைப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

859/2025

கௌரவ சுசந்த குமார நவரத்ன,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) அனுராதபுரம் மாவட்டத்தில், குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள அரசாங்க காணிகளின் எண்ணிக்கை பிரதேச செயலகப் பிரிவு வாரியாக வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(ii) ஹொரொவ்பொத்தான பிரதேச செயலாளர் பிரிவின், 153 ஆம் இலக்க கிராம உத்தியோகத்தர் பிரிவின் கொடின்னேவ கிராமத்தில் அமைந்துள்ள சுமார் 100 ஏக்கர் பரப்பளவு கொண்ட அரசாங்க காணி அனுமதியின்றி துப்புரவு செய்யப்பட்டு அதில் பயிரிடப்பட்டுள்ளமையை அறிவாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த காணியை துப்புரவு செய்து பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேற்கொண்டவர்கள் யாவர் என்பதையும்;

(iv) மேற்படி நபர்களுக்கு அதற்காக சட்டப்பூர்வ உரிமை உள்ளதா என்பதையும்;

(v) இவர்கள் உர மானியத்தை பெற்றுக்கொண்டுள்ளார்களா என்பதையும்;

(vi) ஆமெனில், மேற்படி உர மானியத்தின் பெறுமதி எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

881/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற ‘அளிப்புப் பத்திரம்’ (Deed of Grant) அல்லது ‘காணி உரிமம்’ (Land Permit) இல்லாது மட்டக்களப்பு மாவட்டத்தின், மண்முனைப்பற்று பிரதேச செயலகப் பிரிவிலுள்ள அரசாங்க காணிகளில் ஆட்கள் குடியிருக்கின்றமையை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி அரசாங்க காணிகளிலிருந்து மேற்குறிப்பிட்ட ஆட்களை சட்டரீதியாக வெளியேற்றுவதற்கு 2017.01.01 தொடக்கம் 2025.03.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஏற்புடைய பிரதேச செயலாளரினால் அவர்களுக்கெதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளாரா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட விபரங்கள் யாவை என்பதையும்;

(v) குறிப்பிட்ட பிரதேச செயலாளரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்களில் 2017.01.01 முதல் 2025.03.31 வரையான காலப்பகுதியில் நீதிமன்ற உத்தரவுகளுக்கமைய அரசாங்க காணிகளிலிருந்து வெளியேற்றப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை என்பதையும்;

(vi) வழக்குத் தாக்கல் செய்யவேண்டி இருப்பினும் ஏற்புடைய பிரதேச செயலாளரினால் வழக்குத் தாக்கல் செய்யப்படாத ஆட்கள் இருக்கின்றார்களா என்பதையும்;

(vii) ஆமெனில், மேற்படி ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை என்பதையும்;

(viii) குறிப்பிட்ட சிலருக்கு எதிராக மாத்திரம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமைக்கும், கூடுதலான ஆட்களுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படாமைக்குமான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1062/2025

கௌரவ ரோஹித அபேகுணவர்தன,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்கு மீண்டும் வாகனம் இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டதன் பின்னர் இற்றைவரை இறக்குமதி செய்யப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி வாகனங்களிலிருந்து அறவிட்டுக் கொள்ள வேண்டிய வரித் தொகை என்ஜின் கொள்ளளவுக்கு அமைய வெவ்வேறாக எவ்வளவு;

(iii) வாகனங்களை இறக்குமதி செய்வதன் மூலம் ஈட்டிக்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்ட வரித் தொகை மற்றும் அவற்றிலிருந்து இதுவரை ஈட்டிக்கொள்ளப்பட்ட வரித் தொகை வெவ்வேறாக எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கைக்கு மீண்டும் வாகனம் இறக்குமதி செய்ய அங்கீகாரம் வழங்கப்பட்டதன் பின்னர் இற்றைவரை இறக்குமதி செய்யப்பட்டுள்ள முச்சக்கர வண்டிகளின் எண்ணிக்கை மற்றும் மோட்டார் சைக்கில்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(ii) இறக்குமதி செய்யப்பட்ட ஒரு முச்சக்கர வண்டிக்கும் அறவிடப்படுகின்ற வரித் தொகை எவ்வளவு;

(iii) இறக்குமதி செய்யப்படுகின்ற ஒரு மோட்டார் சைக்கிலுக்கு அறவிடப்படுகின்ற வரித்தொகை என்ஜின் கொள்ளளவுக்கு அமைய வெவ்வேறாக எவ்வளவு;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1270/2025

கௌரவ சுஜீவ திசாநாயக்க,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கையின் மூன்று பிரதான ஏற்றுமதிப் பயிர் வகைகள் யாவை என்பதையும்;

(ii) பிரதான ஏற்றுமதிப் பயிராக தென்னை அறிவிக்கப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(iii) இலங்கையில் காணப்படுகின்ற தென்னை மரங்களின் எண்ணிக்கை மற்றும் தெங்கு பயிரிடப்பட்டுள்ள நிலப்பரப்பு ஹெக்டயார்களில் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) இலங்கையில் தேங்காய் விளைச்சலை அதிகரிக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தெங்கு சார்ந்து இலங்கையில் இன்றளவில் நடைமுறையிலுள்ள கைத்தொழில்கள் யாவை என்பதையும்;

(ii) தெங்கு சார்ந்த உற்பத்திகள் மூலம் இலங்கைக்குக் கிடைக்கும் வருடாந்த வெளிநாட்டுச் செலாவணி அளவு எவ்வளவு என்பதையும்;

(iii) தேங்காய் மட்டை சார்ந்து இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கைத்தொழில்களின் எண்ணிக்கை, அவற்றின் பிரதான ஏற்றுமதி உற்பத்திகள் மற்றும் உருவாக்கப்பட்டுள்ள நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) தேங்காய் மட்டைக் கைத்தொழில் சார்ந்து எழுந்துள்ள முக்கியமான பிரச்சனைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1278/2025

கௌரவ அஜித் கிஹான்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகளில் முதலீட்டுக் கருத்திட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ள காணிகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு காணியும் வழங்கப்பட்டுள்ள முதலீட்டுக் கருத்திட்டம், காணியின் அளவு மற்றும் அமைந்துள்ள பிரதேச செயலகப் பிரிவு வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி காணிகளுக்கு செலுத்த வேண்டிய குத்தகைத் தொகை உரியவாறு செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், குத்தகைத் தொகை செலுத்துவது தவிர்க்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) முதலீட்டுக் கருத்திட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ள மேற்படி காணிகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vi) அவற்றில் குறை அபிவிருத்தியுடைய காணிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vii) முதலீட்டுக் கருத்திட்டங்களுக்கு வழங்கப்பட்ட மேற்படி காணிகள் உரியவாறு அபிவிருத்தி செய்யப்படாதவிடத்து அல்லது குத்தகை செலுத்துதல் தவிர்க்கப்பட்டுள்ள பட்சத்தில் அவை மீள சுவீகரிக்கப்படுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள மேற்படி ஆணைக்குழுவிற்குச் சொந்தமான மொத்தக் காணியின் அளவு ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அக்காணிகள் வீடுகளை நிர்மாணிப்பதற்கு வழங்கப்படுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1313/2025

கௌரவ நிஷாந்த பெரேரா,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) எல்பிட்டிய கல்வி வலயத்தில் அமைந்துள்ள அரச சார்பற்ற பாடசாலைகள் யாவை;

(ii) மேற்படி ஒவ்வொரு பாடசாலையும் ஆரம்பிக்கப்பட்ட வருடம் மற்றும் நிர்வாக சபை அங்கத்தவர்களின் பெயர்கள் வெவ்வேறாக யாது;

(iii) மேற்படி பாடசாலைகளை மேற்பார்வை செய்யும் அரச நிறுவனங்கள் யாவை;

(iv) மத்திய அரசாங்கத்தின் கல்வி அமைச்சுக்கு அல்லது மாகாண கல்வி அமைச்சுக்கு மேற்படி பாடசாலைகள் தொடர்பில் பொதுமக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளனவா;

(v) மேற்படி பாடசாலைகளினால் வழங்கப்படும் கல்வியின் தரம் மற்றும் இப்பாடசாலை மாணவர்களது உரிமைகளை பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1570/2025

கௌரவ லால் பிரேமநாத்,— கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் ஓய்வூதிய உரித்து மற்றும் நிலுவைப் பணத்தை செலுத்தல் தொடர்பாக நிலவுகின்ற தீர்க்கப்படாத பிரச்சினைகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள துரித நடவடிக்கைகள் மற்றும் அதற்கெடுக்கும் திட்டவட்டமான காலப்பகுதி யாதென்பதையும்;

(iii) அவர்களுக்கான பதவியுயர்வை வழங்கல் மற்றும் தரவரிசைப்படுத்தலுக்கு ஏற்புடைய நடவடிக்கைமுறையைத் துரிதமாக நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அதன் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

(v) சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொடர்பாக அறிக்கையிடப்படும் துர்நடத்தை மற்றும் மோசடிகள் தொடர்பான ஒழுக்காற்று நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) சமுர்த்தி வங்கிக் கட்டமைப்பை கணினிமயப்படுத்தும் கருத்திட்டத்தை பூர்த்தி செய்வதற்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2026 சனவரி 21, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

741/2025

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள கூட்டுறவு கிராமிய வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை;

(iii) மேற்படி கூட்டுறவு கிராமிய வங்கிகளில் இன்றளவில் செயலற்ற நிலையில் காணப்படும் கூட்டுறவு கிராமிய வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை யாது;

(iv) இதன் விளைவாக தங்களது சேமிப்புத் தொகைகளை மீளப்பெற்றுக்கொள்ள முடியாதுள்ள மேற்படி வங்கிகளின் சேமிப்பாளர்களுக்கு நீதியை நிலைநாட்ட மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

812/2025

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையிலுள்ள சிறைச்சாலைகளில் காணப்படுகின்ற நெரிசல் குறித்து ஆராய்வதற்காக, இறுதியாக குழுவொன்று நியமிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அக்குழுவைச் சேர்ந்த உறுப்பினர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) சிறைச்சாலைகளில் காணப்படுகின்ற நெரிசலைக் குறைப்பதற்காக சம்பந்தப்பட்ட குழுவினால் வழங்கப்பட்டுள்ள சிபாரிசுகள் யாவை என்பதையும்;

(iv) அந்த சிபாரிசுகளை நடைமுறைப்படுத்த எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1009/2025

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் கும்பல் வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் நிதி இழப்பீடு, மருத்துவ உதவி அல்லது புனர்வாழ்வுத் திட்டங்கள் போன்ற ஏதேனும் குறிப்பிட்ட உதவிகளை அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளதா அல்லது அறிமுகப்படுத்த எண்ணியுள்ளதா என்பதையும்;

(ii) கும்பல் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்ற மாவட்டங்கள் அல்லது மாகாணங்களில் இதுபோன்ற எந்தவொரு ஒத்துழைப்புத் திட்டங்களினதும் தற்போதைய நடைமுறைப்படுத்தலினதும் நிலை என்ன என்பதையும்;

(iii) இத்தகைய பாதிக்கப்பட்டவர்களுக்குச் சரியான நேரத்தில் ஒத்துழைப்பு மற்றும் நீண்டகால உதவி கிடைப்பதை உறுதி செய்வதற்காக மாகாண சபைகள் அல்லது மாவட்டச் செயலகங்களுக்கு ஏதேனும் சுற்றறிக்கைகள், வழிகாட்டுதல்கள் அல்லது கொள்கைச் சட்டகங்கள் வெளியிடப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1088/2025

கௌரவ (டாக்டர்) பத்மநாதன் சத்தியலிங்கம்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கமத்தொழிலும் கால்நடை வளர்ப்பும் வன்னிப் பிரதேச வாழ் மக்களின் பிரதான வாழ்வாதாரமாக உள்ளது என்பதையும்;

(ii) உரிய சந்தை வாய்ப்பு இல்லாமை, காலநிலை மாற்றங்கள், வன விலங்குகளினால் ஏற்படுகின்ற பயிர்ச் சேதங்கள் மற்றும் தொற்றுநோய்கள் போன்ற காரணிகளால் கமத்தொழிலில் ஈடுபடுகின்ற மக்களின் ஆர்வம் குறைவடைந்து வருகின்றது என்பதையும்;

(iii) கால்நடை வளர்ப்பானது ஒப்பீட்டளவில் இலாபம் தரக்கூடிய தொழில்துறையாக இருப்பதால் அதிகமான விவசாயிகள் இம்முயற்சியில் ஈடுபடுகின்றார்கள் என்பதையும்;

(iv) எனினும் அண்மைக் காலமாக கால்நடை திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதுடன், ஒரு நாளில் சுமார் 35இற்கும் அதிகமான மாடுகள் திருடப்பட்டதாக அண்மையில் நடைபெற்ற வவுனியா வடக்கு பிரதேச அபிவிருத்திக் குழு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது என்பதையும்;

(v) இவ்விடயம் சம்பந்தமாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தும் இற்றைவரை தீர்வுகள் கிடைக்கவில்லை என்பதையும்;

(vi) இதனால் வன்னி மக்கள் பெரும் பொருளாதார சவால்களுக்கு முகம் கொடுத்துள்ளார்கள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனின், இதற்கான தீர்வுகள் யாவை என்பதையும்;

(ii) அத்தகைய தீர்வுகள் எக்காலப்பகுதியில் வழங்கப்படும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1174/2025

கௌரவ சுனில் ரத்னசிரி,— பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையிலுள்ள பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) இன்றளவில் இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் மொத்த எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) இன்றளவில் இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பதவி வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) ஆமெனில், ஒவ்வொரு பதவி வாரியாக மேற்படி வெற்றிடங்களை நிரப்பும் திகதி வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2024 ஆம் ஆண்டு தொடக்கம் 2025 ஆம் ஆண்டு மே மாதம் வரை கைது செய்யப்பட்டுள்ள ஒழுங்கமைக்கப்பட்ட வகையில் செயற்படும் குற்றவாளிகளின் எண்ணிக்கை ஆண்டுவாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) இன்றளவில் இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் நிகழும் முறைகேடுகள் இனங்காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அம்முறைகேடுகளை கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப் பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1222/2025

கௌரவ சுரங்க ரத்நாயக்க,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் இலங்கையில் உள்ள 'அஸ்வெசும' பயனாளிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) நலன்புரி நன்மைகள் கிடைக்கப்பெற வேண்டிய அனைத்து நபர்களுக்கும் 'அஸ்வெசும' நலன்புரி நன்மைகள் வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(iii) இன்றளவில் மேற்படி நன்மைகள் கிடைக்காத போதிலும் அத்தகைய நன்மைகளை பெற்றுக்கொள்வதற்கு தகைமையுடைய ஆட்களுக்கு அந்நன்மைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அவர்களுக்கு மேற்படி நன்மைகள் வழங்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1267/2025

கௌரவ எம்.எஸ். உதுமாலெப்பை,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த அரசாங்கத்தினால் கிழக்கு மாகாணத்தின் அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் காணி அனுமதிப்பத்திரங்களுக்கான உரித்து உறுதிகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட காணி அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஏற்ப வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அம்மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரித்து உறுதிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஏற்ப வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேலும் வழங்கப்பட வேண்டிய உரித்து உறுதிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஏற்ப வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) மேற்படி உரித்து உறுதிகளை விரைவாக வழங்குவதற்கு அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1269/2025

கௌரவ துரைராசா ரவிகரன்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அரசாங்கப் பாடசாலைகளில் பகுதியளவில் நிர்மாணிக்கப்பட்டு கைவிடப்பட்டுள்ள கட்டடங்கள் உள்ளதென்பதை அறிவாரா;

(ii) மேற்படி கட்டடங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாகாண வாரியாக வெவ்வேறாக எத்தனை;

(iii) மேற்படி கட்டடங்களின் நிர்மாணப் பணிகள் தாமதமாவதற்கு ஏதுவான பிரதான காரணங்கள் யாவை;

(iv) மேற்குறிப்பிட்ட கட்டடங்களில், 2025 ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டத்தில் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வதற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ள கட்டடங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாகாண வாரியாக வெவ்வேறாக எத்தனை;

(v) அக்கட்டடங்களின் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்படும் காலப்பகுதி யாது;

(vi) பகுதியளவில் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள கட்டடங்கள் காரணமாக பாடசாலை மாணவர்களுக்கும் பாடசாலை பணியாட்டொகுதிக்கும் ஆபத்தேற்படாத வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் யாவை;

(vii) மேற்படி கட்டடங்களைத் துரிதமாகவும் பாதுகாப்பாகவும் நிர்மாணித்து முடிப்பதற்கு பின்பற்றப்படும் செயன்முறை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1468/2025

கௌரவ சானக மாதுகொட,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் கீழ் விசேட விளையாட்டுப் பாடசாலை அபிவிருத்திக் கருத்திட்டத்திற்கு தென் மாகாணம் தெரிவு செய்யப்படாமைக்கான காரணங்கள் யாவை;

(ii) மேற்படி கருத்திட்டத்திற்கு, 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு;

(iii) 2025 ஆகஸ்ட் மாதமளவில் மேற்படி நிதியிலிருந்து செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவு;

(iv) விசேட விளையாட்டுப் பாடசாலை அபிவிருத்திக் கருத்திட்டத்திற்கு ஐந்து மாகாணங்கள் மாத்திரம் தெரிவு செய்யப்பட்டதன் அடிப்படை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1562/2025

கௌரவ (பேராசிரியர்) எல். எம். அபேவிக்ரம,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 'அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை' கருத்திட்டத்தின் கீழ், மாத்தறை மாவட்ட பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்களுக்கு செலவிடப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள கருத்திட்டங்களில், பணிகள் நிறைவு செய்யப்பட்ட மற்றும் பணிகள் நிறைவுச் செய்ய முடியாது போன கருத்திட்டங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதயும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டங்களின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட, இன்றளவில் பயன்படுத்த முடியாத நிலையிலுள்ள மாத்தறை மாவட்டத்தின் ஊருபொக்க தேசிய பாடசாலையின் இரண்டு ஆசிரியர் விடுதிகளை பயன்படுத்தக்கூடிய நிலைக்கு மேம்படுத்துவதற்குள்ள தடைகள் யாவை என்பதையும்;

(ii) அவற்றை பயன்படுத்தக்கூடிய நிலைக்கு மேம்படுத்தும் பொருட்டு செயற்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ள திட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2026 சனவரி 22, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1116/2025

கௌரவ ரொஷான் அக்மீமன,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நிரல் அமைச்சினால் நிருவகிக்கப்படுகின்ற திருகோணமலை மாவட்டத்தில் உள்ள அரச வைத்தியசாலைகள் யாவை;

(ii) திருகோணமலை ஆதார வைத்தியசாலையை அபிவிருத்தி செய்வதற்காக தயாரிக்கப்பட்டுள்ள திட்டங்கள் யாவை;

(iii) வினைத்திறன்மிக்க சேவையினை வழங்கும் பொருட்டு கந்தளாய் வைத்தியசாலையில் தடையாக உள்ளதென இனங்காணப்பட்டுள்ள சிக்கல்கள் யாவை;

(iv) மேற்படி சிக்கல்களை தீர்த்துவைப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1180/2025

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கிளிநொச்சி நகர மத்தியில் சதொச விற்பனை நிலையம் அமைந்துள்ள கட்டடம் உரிய அங்கீகாரமின்றி நிர்மாணிக்கப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) நிர்மாணப் பணிகளுக்குரிய அங்கீகாரம் கரைச்சி பிரதேச சபையிடமிருந்து உரிய முறையில் பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி கட்டடத்தை நிர்மாணிப்பதற்கு அரச நிதி செலவிடப்பட்டிருக்குமானால், அதன் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட விலைமனுக் கோரல் பற்றிய விபரங்கள் யாவை என்பதையும்;

(iv) நிர்மாணப் பணிகளுக்கு செலவிடப்பட்ட தொகை எத்தனை மில்லியன் ரூபாய் என்பதையும்;

(v) மேற்படி கட்டடத்தின் தற்போதைய உரிமையாளர் யாரென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கட்டடம் அமைந்துள்ள காணியின் உரித்தைக் கொண்டுள்ள நிறுவனம் யாதென்பதையும்;

(ii) மேற்படி காணி நீண்ட காலக் குத்தகைக்கு யாதேனுமொரு தரப்புக்கு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1317/2025

கௌரவ கே. காதர் மஸ்தான்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வவுனியா மாவட்டத்திலுள்ள நான்கு பிரதேச செயலகப் பிரிவுகளில் வாழ்கின்ற நடுத்தர வகுப்பினருக்கு காணிகளை வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இற்றைவரையில் வழங்கப்பட்டுள்ள காணிகளின் மொத்த அளவு ஏக்கர்களில் எவ்வளவு என்பதையும்;

(ii) இக்காணிகளின் அளவு ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவு அடிப்படையில் ஏக்கர்களில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்ட காணிகளில் இரண்டாம் தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு ஏக்கர்களில் எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு காணிகளும் வழங்கப்பட்டுள்ள இரண்டாம் தரப்பினரின் பெயர், காணி அமைந்துள்ள கிராம அலுவலர் பிரிவு மற்றும் காணி வழங்கப்பட்ட அடிப்படை முதலிய விபரங்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இரண்டாம் தரப்பினருக்கு வழங்கப்பட்ட மேற்படி காணிகளில் கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் வீடமைப்புத் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டதை அறிவாரா என்பதையும்;

(ii) இவ்வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ள காணிகள் உரிய வகையில் குறிப்பிட்ட பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், இதற்குரிய ஆவணங்கள் இற்றைவரையில் பயனாளிகளுக்கு வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1323/2025

கௌரவ சுகத் வசந்த த சில்வா,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாற்றுத்திறனுடைய மாணவர்கள் தமது கற்கை நெறிகளைத் தொடர்வதற்கான வசதிகள் அரச பல்கலைக்கழக கட்டமைப்பினுள் காணப்படுகின்றதா என்பதையும்;

(ii) பிரெய்லி முறை, சைகை மொழி மற்றும் உருப்பெருப்பிக்கப்பட்ட எழுத்துக்கள் உள்ளிட்ட மாற்றுத் தொடர்பூடகங்களை மேம்படுத்துவதற்குப் போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) இன்றேல், அதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) பரீட்சைகளுக்குத் தோற்றுகின்றபோது மாற்றுத்திறனுடைய மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வசதிகள் யாவை என்பதையும்;

(v) பரீட்சைகளில் மாற்றுத்திறனுடைய மாணவர்களுக்கு அந்தந்த மாற்றுத்திறன் தன்மைக்குரியதாக நியாயமான வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vi) மாற்றுத்திறனுடைய மாணவர்களுக்கு ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் கணினிகளைப் பயன்படுத்தி பரீட்சைகளில் விடையளிப்பதற்கான வாய்ப்புக் கிடைக்கின்றதா என்பதையும்;

(vii) மாற்றுத்திறனுடைய மாணவர்கள் நூலகங்களைப் பயன்படுத்துவதற்குத் தேவையான வசதிகளை விரிவுபடுத்த எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அரச பல்கலைக்கழகங்களில் மாற்றுத்திறனுடைய மாணவர்களுக்குப் போதுமான அணுகல் வசதிகள் காணப்படுகின்றனவா என்பதையும்;

(ii) இன்றேல், அணுகல் வசதிகளை விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iii) 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் அதற்கான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1348/2025

கௌரவ உபுல் கித்சிறி,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை அதிபர் சேவையின் I, II மற்றும் III ஆகிய ஒவ்வொரு தரங்களிலும் தற்போது பணியாற்றுபவர்களின் எண்ணிக்கை மற்றும் தற்போது நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு தரத்திற்கும் அமைவாக, 2025.09.30 ஆம் திகதியாகும்போது 57 வயதை பூர்த்தி செய்துள்ள அதிபர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) தற்போது பதிற்கடமையாற்றும் அதிபர் தரம் கொண்டிராதவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அவர்களின் தகுதிகளுக்கேற்ப உரிய தரங்களுக்கு அவர்களை உள்ளீர்ப்பதற்காக ஏதேனும் வேலைத்திட்டம் தயாரிக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1555/2025

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையின் (NAITA) திருகோணமலை மாவட்ட அலுவலகம், திருகோணமலை மாவட்ட பயிற்சி நிலையம் மற்றும் கிண்ணியா பயிற்சி நிலையம் ஆகியன தனியார் கட்டிடங்களில் வாடகைக்கு இயங்கிவருவதை அவர் அறிவாரா?

(ii) ஆமெனின், மேற்படி கட்டிடங்களுக்கு செலுத்தப்படும் மாதாந்த வாடகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) இந்த பயிற்சி நிலையங்களில் நடாத்தப்படும் கற்கைநெறிகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) மேற்படி பயிற்சி நிலையங்களில் நடாத்தப்படவிருந்த கற்கைநெறிகள் இன்றளவில் நடாத்தபடாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவில் 'யுனிவர்சிட்டி கொலேஜ்' (University College) ஒன்றை நிறுவுவதற்காக காணி சீர்த்திருத்த ஆணைக்குழுவினால் 13 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டு, 2018 ஆம் ஆண்டின் வரவுசெலவுத்திட்டத்தில் 50 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் தற்போது கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றதென்பதையும்;

(ii) மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்ட அலுவலகம் மற்றும் பயிற்சி நிலையம் ஆகியவற்றை இக்கட்டிடத்தில் தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1701/2025

கௌரவ தர்மப்பிரிய திசாநாயக்க,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஆயுர்வேத மருத்துவத் துறையில் இன்றளவில் பதிவு செய்யப்பட்டுள்ள ஆயுர்வேத மருத்துவ உற்பத்தி நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை;

(iii) ஆயுர்வேத உற்பத்திகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(iv) ஆயுர்வேத உற்பத்திகள் தொடர்பான சந்தைப்படுத்தல் விளம்பரங்களுக்கு சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவது தொடர்பில் கொள்கை ரீதியான முடிவு எடுக்கப்பட்டுள்ளதா;

(v) ஆமெனில், அந்தக் கொள்கை யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஆயுர்வேத உற்பத்திகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக சமூக வலைத்தளங்களில் விளம்பரப்படுத்தப்படுகின்றது என்பதையும்;

(ii) இந்த விளம்பரங்கள் மூலம் பொதுமக்களின் பணம் மோசடி செய்யப்படுகின்றது என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) ஆமெனில், இது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1737/2025

கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) ஜீ.டி. சூரியபண்டார,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 'மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம்' ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(ii) அது ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கங்கள் யாவையென்பதையும்;

(iii) இலங்கையில் மரமுந்திரிகை பயிரிடப்பட்டுள்ள நிலப்பரப்பின் அளவு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2020 ஆம் ஆண்டு தொடக்கம் தற்போது வரையில் வருடாந்த -

(i) மரமுந்திரிகை அறுவடை மற்றும் தேவைப்பாடு எவ்வளவு என்பதையும்;

(ii) ஏற்றுமதி செய்யப்பட்ட மரமுந்திரிகையின் அளவு மற்றும் அதன் மூலம் ஈட்டப்பட்ட அந்நியச் செலாவணி எவ்வளவு என்பதையும்;

(iii) இறக்குமதி செய்யப்பட்ட மரமுந்திரிகையின் அளவு மற்றும் அதற்காகச் செலவிடப்பட்ட அந்நியச் செலாவணி எவ்வளவு என்பதையும்;

வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இலங்கைக்கு மரமுந்திரிகையை இறக்குமதி செய்யும் தனியார் நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(ii) உள்நாட்டு மரமுந்திரிகை உற்பத்தியாளர்களையும் வர்த்தகர்களையும் பாதுகாப்பதற்கு அமைச்சினூடாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

மேலும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1759/2025

கௌரவ மஞ்ஜுள சுரவீர ஆரச்சி,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) “லொனக் டேரி பாம்” (lonach dairy farm) கால்நடைப் பண்ணையை ஆரம்பிக்கும்போது, சுற்றாடல் சார்ந்த சட்டத் தேவைப்பாடுகள் பூர்த்திச் செய்யப்பட்டனவா என்பதையும்;

(ii) மேற்படி பண்ணையில் நாளாந்தம் ஒன்றுசேரும் கால்நடைக் கழிவுகளை வெளியேற்றும் வழிமுறை யாதென்பதையும்;

(iii) மேற்படி பண்ணை, 2020 ஆம் ஆண்டு தொடக்கம் தற்போது வரை சம்பந்தப்பட்ட வருடாந்த சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொண்டுள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி பண்ணை சுற்றாடல் பரிந்துரைகளுக்கமைவாக தொழிற்படுகின்றதா என்பதையும்;

(v) மேற்படி பண்ணையின் முகாமைத்துவம் ஏற்புடைய சுற்றாடல் பரிந்துரைகளை மீறிச் செயற்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றனவா என்பதையும்;

(vi) ஆமெனில், அது தொடர்பாக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1760/2025

கௌரவ திலிண சமரகோன்,— வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அனுராதபுரம் மாவட்டத்தில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் நடைமுறைப்படுத்தப்பட்ட வீடமைப்புக் கருத்திட்டங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டங்களுக்காக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் உதவித் தொகையாக மற்றும் கடனாக வழங்கப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை மற்றும் அவர்கள் தெரிவு செய்யப்பட்ட வழிமுறை யாதென்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டங்கள் மூலம் நிர்மாணிப்பதற்கு உத்தேசித்த வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) மேற்குறிப்பிட்ட வீடுகளுள் ஏற்கனவே நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை ஒவ்வொரு கருத்திட்டம் வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(vi) வீடமைப்புப் பணிகள் நிறைவு செய்யப்படவில்லை எனின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(vii) வீடமைப்புக் கருத்திட்டங்களுக்காக பயன்படுத்திய காணிகள் தொடர்பாக எழுந்துள்ள சிக்கல்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2026 சனவரி 23, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1398/2025

கௌரவ எம்.எஸ் அப்துல் வாசித்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் மற்றும் லாஹுகலை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள விவசாயிகளுக்கு நீர்ப்பாசனக் கருத்திட்டங்கள் மூலமாக நீர் வழங்கப்பட வேண்டும் என்பதையும்;

(ii) மேற்படி விவசாயிகளுக்கு பாசன நீரை வழங்கும் நோக்கில் 2018, 2019, மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் முறையே ரூ.150 மில்லியன், 25 மில்லியன் மற்றும் 50 மில்லியன் செலவிட்டு கடந்த அரசாங்கங்கள் 'ஹெட ஓயா' நீர்ப்பாசனக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியிருந்தன என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(ஆ) (i) மேற்படி பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த விவசாயிகளுக்கு பாசன நீரை வழங்கும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்பட்ட மேற்படி கருத்திட்டத்தின் தற்போதைய நிலைமை யாதென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலமாக மேலே (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளில் வசிக்கின்ற விவசாயிகளின் விவசாய நடவடிக்கைகளுக்கு நீரை பெற்றுக்கொள்ள முடியுமென்பதால் குறித்த கருத்திட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1465/2025

கௌரவ (செல்வி) அம்பிக்கா சாமிவெல்,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் கீழ் இயங்கும் நிறுவனங்களின் 2020ஆம் ஆண்டு முதல் 2024ஆம் ஆண்டு வரையிலான வருமானம் மற்றும் செலவு அறிக்கைகள் வெவ்வேறாக யாவை;

(ii) மேற்படி மன்றத்தின் 2025ஆம் ஆண்டுக்கான வருமான விபரம் யாது;

(iii) சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் முகாமைத்துவ சபை 2025ஆம் ஆண்டினுள் நடாத்தியுள்ள கூட்டங்களின் எண்ணிக்கை மற்றும் எடுக்கப்பட்டுள்ள விசேட முடிவுகள் / தீர்மானங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறவிப்பாரா?

(ஆ) (i) ஹட்டன் பிரதேசத்தில் அமைந்துள்ள தொண்டமான் தொழிற் பயிற்சி நிலையத்தின் தற்போதைய செயற்பாடுகள் யாவை;

(ii) 2025 ஆம் ஆண்டில் இந்நிலையத்தில் பயிற்சி மற்றும் பாடநெறிகளுக்காக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாது;

(iii) நோர்வுட் விளையாட்டு மைதானத்திலிருந்து வருமானத்தை ஈட்டிக்கொள்வதற்கான வேலைத்திட்டமொன்று தயார் செய்யப்பட்டுள்ளதா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1499/2024

கௌரவ பீ.ஆரியவங்ச,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 'அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை கருத்திட்டத்தின்' பிரகாரம் இரத்தினபுரி மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவற்றில் தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ள கருத்திட்டங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) அக்கருத்திட்டங்களை மீண்டும் முன்னெடுப்பதற்காக மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1541/2025

கௌரவ (கலாநிதி) நந்தன மில்லகல,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யட்டியாந்தோட்டை மற்றும் புலத்கொஹுபிட்டிய ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சிறிய நீர்மின் உற்பத்தி நிலையங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலகங்களுக்கும் ஏற்ப வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி மின் உற்பத்தி நிலையங்களை நிர்மாணிக்கையில் அதற்கான சட்டரீதியான அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி மின் உற்பத்தி நிலையங்கள் ஒவ்வொன்றிலிருந்தும் தேசிய மின் கட்டமைப்பில் சேர்க்கப்படும் மின்சாரத்தின் அளவு வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) மேற்படி சிறிய மின் உற்பத்தி நிலையங்களின் உரிமையாளர்கள் சுற்றுச்சூழல் அமைப்பைப் பாதுகாக்கவும், சமூக சூழலை மேம்படுத்தவும் ஒப்பந்தங்களின்படி மேற்கொள்ள வேண்டிய பணிகளை முறையாக பின்பற்றுகின்றார்களா என்பதையும்;

(v) அனைத்து சிறிய நீர்மின் நிலையங்களும் ஒழுங்குறுத்துகை செய்யப்படுகின்றதா என்பதையும்;

(vi) உரிய ஒழுங்குறுத்துகை அளவுகோல்களுடன் இசைவாக்கம் பெறாதுள்ள சிறிய நீர்மின் நிலையங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1557/2025

கௌரவ டபிள்யூ. எச். எம். தர்மசேன,— கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட இலங்கை சீனி (தனியார்) கம்பனியின் பெல்வத்த மற்றும் செவனகல சீனித் தொழிற்சாலைகளுக்குச் சொந்தமான பயிர் நிலங்களின் அளவு வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி காணிகளில் பயிர்ச்செய்கைக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள மற்றும் ஈடுபடுத்தப்படாதுள்ள காணிகளின் அளவு வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி தொழிற்சாலைகளில் சீனி மற்றும் எத்தனோல் உற்பத்தி நடவடிக்கைகள் எதிர்பார்த்த அளவில் நடைபெறுகின்றனவா என்பதையும்;

(iv) 2020 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை, அத்தொழிற்சாலைகள் மூலமாக மேற்கொள்ளப்பட்டுள்ள வருடாந்த சீனி உற்பத்தி மற்றும் விற்பனை யாதென்பதையும்;

(v) அத்தொழிற்சாலைகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட கரும்புக் கொள்வனவு நடவடிக்கை ஸ்தம்பிதம் அடைந்துள்ளமையால், கரும்பு விவசாயிகள் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர் என்பதை அறிவாரா என்பதையும்;

(vi) சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் ஊழியர்களின் சம்பளம், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் போன்றவற்றின் மீது செலுத்த வேண்டிய செலுத்துகைகளை உரிய முறையில் செலுத்துவதில்லையென தெரியவந்துள்ளதால், இதுபோன்ற நிலைமைகளைத் தவிர்ப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(vii) இந்நிறுவனங்களின் செயற்பாடுகளையும் ஊழியர்களின் உரிமைகளையும் உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல, ஏன்?

1565/2025

கௌரவ ஸ்டெபனி பிரனாந்து,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ராகம நகரிலுள்ள, நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான காணிகளின் மொத்த அளவு யாதென்பதையும்;

(ii) மேற்படி காணிகளில் சட்ட விரோதமாக நிர்மாணிக்கப்பட்டுள்ள வர்த்தக நிலையங்கள் காணப்படுகின்றனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அவற்றின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் நுழைவாயிலுக்கு முன்பாக, மேம்பாலம் ஆரம்பமாகும் இடத்தில் காணப்படுகின்ற நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான காணியில் அமைந்துள்ள பொலிஸ் காவலரணைச் சுற்றி கடைகள் அமைக்கப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி கடைகள் நிர்மாணிக்கப்படும் நடவடிக்கைகள் தொடங்கிய ஆரம்ப காலத்தில், அதிகாரசபையின் ராகம நகரத்திற்கு பொறுப்பான கள அலுவலர்கள் இது தொடர்பில் அதிகாரசபைக்கு அறிவித்திருந்தார்களா என்பதையும்;

(iii) ஆமெனில், அது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) அதற்கமைவாக மேற்படி கட்டுமானங்கள் அகற்றப்பட்டுள்ளனவா என்பதையும்;

(v) இன்றேல், மேற்படி கட்டுமானங்களை அகற்றுவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1636/2025

கௌரவ ருவன் விஜேவீர,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனராகலை மாவட்டத்திற்குச் சொந்தமான மொத்த நிலப்பரப்பு மற்றும் அந்த நிலப்பரப்பில் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்குச் சொந்தமாக காணப்படுகின்ற நிலப்பரப்புகள் வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அது சதவீதமாக எவ்வளவு என்பதையும்;

(iii) ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியை வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் கொண்டுவரும்போது பின்பற்றப்படும் அளவுகோல்கள் யாவையென்பதையும்;

(iv) 2021 ஆம் ஆண்டில் மொனராகலை மாவட்டத்தில் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் பிரதேச செயலாளருக்கு சாட்டுதல் செய்யப்பட்டுள்ள காணியின் அளவு யாதென்பதையும்;

(v) அவற்றுள், பிரதேச செயலாளரால் நீண்டகால குத்தகை அடிப்படையில் விடுவிக்கப்பட்டுள்ள காணியின் அளவு யாதென்பதையும்;

(vi) அவ்வாறாயின், அது எந்த நிறுவனங்கள் அல்லது தனிநபர்களுக்கு என்பதையும்;

(vii) இந்த சாட்டுதல் செய்யும் செயன்முறையினுள், மொனராகலை மாவட்டத்தில் உள்ள `வந்தம-தெமலிய' வன ஒதுக்கத்திற்குச் சொந்தமான காணியின் அளவு மற்றும் இதுவரை பிரதேச செயலாளருக்கு விடுவிக்கப்பட்டுள்ள காணியின் அளவு வெவ்வேறாக யாதென்பதையும்;

(viii) பிரதேச செயலாளருக்கு விடுவிக்கப்பட்டுள்ள காணி அளவில் குத்தகை அடிப்படையில் விடுவிக்கப்பட்டுள்ள காணியின் அளவு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1677/2025

கௌரவ (திருமதி) ஒஷானி உமங்கா,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடமையின் போது உயிரிழந்த முப்படை அங்கத்தவர்களின் விதவைகள்/ தங்கி வாழ்வோருக்கு வழங்கப்பட்டு வந்த விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியம் அல்லது கொடுப்பனவுகள் செலுத்தும் நடவடிக்கைகள் தாமதமாகின்றமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி தாமதங்களை தடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அங்கவீன நிலைமை காரணமாக சேவையிலிருந்து விலகிய பின்னர் திருமணம் முடித்த இராணுவப்படை அங்கத்தவர்கள் உயிரிழந்த பின்னர் அவர்களின் விதவைகள்/தங்கி வாழ்வோருக்கு செலுத்தப்படும் ஊதியங்கள் அல்லது கொடுப்பனவுகள் யாவை என்பதையும்;

(iv) அவர்களுக்கு கொடுப்பனவுகள் செலுத்தப்படவில்லை எனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி ஊதியங்கள் அல்லது கொடுப்பனவுகளை செலுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2009.05.19 ஆம் திகதிக்கு முன்னர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட இராணுவப் படை அங்கத்தவர்களில் 85% ஓய்வூதிய உரித்தை கொண்டிராதவர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி ஓய்வூதிய உரித்து செலுத்தப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கு 85% ஓய்வூதிய உரித்து வழங்கப்பட வேண்டியது பொருத்தமானதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அவர்களுக்கு மேற்படி ஓய்வூதிய உரித்தை செலுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1738/2025

கௌரவ கிட்ணன் செல்வராஜ்,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பதுளை மாவட்டத்தில் —

(i) உள்ள கூட்டுறவு விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) தோட்டப்புறங்களைச் சார்ந்து இயங்கும் கூட்டுறவு விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) கடந்த 10 வருடங்களுக்குள் மூடப்பட்ட கூட்டுறவு விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தோட்டப்புறங்களைச் சார்ந்த வீடமைப்பு மற்றும் கடன் வழங்கல் நடவடிக்கைகளுக்காக கூட்டுறவுச் சங்கங்கள் இயங்குகின்றன என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், பதுளை மாவட்டத்தில் தோட்டப்புறங்களைச் சார்ந்ததாக இயங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1784/2025

கௌரவ பத்மசிரி பண்டார,— வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையில் காணப்பட்ட தொழில்நுட்பச் சேவை இன்றளவில் இயங்கு நிலையில் உள்ளதா;

(ii) ஆமெனில், அச்சேவையில் கடமையாற்றி வருகின்ற தொழில்நுட்ப அலுவலர்களின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி அலுவலர்களுக்கு வெளிக்கள கடமைகளுக்காக 1 கி.மீ இற்கு செலுத்தப்படுகின்ற பிரயாணச் செலவுக் கொடுப்பனவு எவ்வளவு;

(iv) தொழில்நுட்ப அலுவலர்களுக்கு செலுத்தப்படுகின்ற இணைந்த படிகள் எவ்வளவு;

(v) மேற்படி கொடுப்பனவு அங்கீகரிக்கப்பட்ட திகதி யாது;

(vi) குறித்த அலுவலர்களின் பதவி உயர்வுக்கான நடவடிக்கைமுறையை இற்றைப்படுத்த மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2026 ஆம் ஆண்டுக்காக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு வீடுகளை நிர்மாணிக்கவென ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு;

(ii) மேற்படி ஏற்பாடுகளுக்கு இசைவாக அதிகாரசபை கொண்டுள்ள தொழில்நுட்ப அலுவலர்களின் எண்ணிக்கை போதுமானதா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?